**செ.வெ.எண்: 83** **நாள்: 28.11.2016**

# பத்திரிகைச்செய்தி

தமிழ்நாடு அரசு புதுக்கோட்டை மாவட்டம், தொழிலாளர் நலத்துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்கள் அனைவருக்கும், வங்கிக்கணக்கு துவங்குவதற்கு வசதியாக புதுக்கோட்டை கீழராஜ வீதியில் உள்ள கனரா வங்கி மற்றும் யூகோ வங்கிகளில் 30.11.2016, 01.12.2016 மற்றும் 02.12.2016 ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம் நடைபெறும். மேற்கண்ட தேதிகளில் வாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்கள் உரிய ஆவணங்களுடன் (சான்றொப்பமிடப்பட்ட குடும்ப அட்டை நகல், வாக்காளர் அடையாள அட்டை நகல், ஆதார் அட்டை நகல் மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் மூன்று) இந்த சிறப்பு முகாமில் பங்கேற்று வங்கி கணக்கை துவக்கி கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. இனிவரும் காலங்களில் உறுப்பினர்களுக்கான பணப்பயன்கள் அனைத்தும் வங்கிகள் மூலம் மட்டுமே பட்டுவாடா செய்ய இயலும் என்பதால், இதுவரை வங்கிக்கணக்கு துவங்காத உறுப்பினர்கள் இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி வங்கிக்கணக்கு துவங்கிக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**